# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 5/2021. நாள்.28.02.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | வயது | |
| த/பெ. க/பெ. | | மதம் | |
| முகவரி | | தொழில் | |

<u>வா.சா.1 ஆஜர். 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ராணுவத்தில் பணி செய்தேன். ராணுவத்தில் சேரும்போது எனது பெயரை நாகராஜன் என்று பதிவு செய்து சேர்ந்தேன். என்னுடைய பணி பதிவேட்டில் எனது தகப்பனார் பெயர் ராமகவுண்டர் என்று கூறியுள்ளேன். எனது தகப்பனார் பெயர் ராமகவுண்டர் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் பெயர் முத்துமாரிகவுண்டர் ஆகும். பள்ளியில் சேரும்போது எனது பெயரை கணேசன் என்றும், தகப்பனார் பெயர் முத்துமாரிகவுண்டர் என்றும் கூறிப்பிட்டு சேர்த்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாரை முத்துமாரி மற்றும் முத்துமாரிகவுண்டர் என்றும் அழைப்பார்கள். வேறு பெயர் கிடையாது.

எனக்கு கணேசன் என்று தான் பெயர். ஆனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் எனது பெயரை கணேசன் (எ) நாகராஜ் என்று மாற்றினேன். எனது வழக்குரையில் மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் எனது பெயரை கணேசன் (எ) நாகராஜ் என்று கூறிப்பிட்டு கூறவில்லை. எனது ஊரில் என்னை கணேசன் என்று கேட்டால் தான் தெரியும். நாகராஜ் என்று கேட்டால் தெரியாது. 1970 ம் வருடம் 1ம் பிரதிவாதி பெரியண்ணகவுண்டர் முத்துமாரி கவுண்டர், கணேசன், மீனாட்சி ஆகியோர்களுக்கு பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்.

பெரியண்ணன் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எங்களுக்கு எழுதி கொடுத்தார். பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட சொத்துக்களை தவிர பெரியண்ணனுக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. முத்துமாரியின் வாரிசுகள் மீனாட்சி, பெரியண்ணன், கணேசன் ஆகும். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் முழுவதும் தெரியாது. அதேபோல் விஸ்தீரனம், ஜெக்குபந்தி ஆகியவை தெரியாது. வ.சா.ஆ.14 ஆவணத்தில் 4 நபர்களின் பெயர்கள் உரிமையாளர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் முதலில் எனது தகப்பனார் பெயர் மட்டும் தான் இருந்தது. அதற்கு பிறகு மோசடியாக 4 பெயர்கள் சேர்க்கப்பட்டு உள்ளது.

வா.சா.ஆ.14 ஆவணத்தில் கண்ட சர்வே எண் சொத்துக்களின் 1ம் பிரதிவாதிக்கு இருந்த அனுபவ சுவாதீனத்தை அனுசரித்து தான் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்கள்.214,215,216,235 இ, ஆகிய சொத்துக்களிலும்

1ம் பிரதிவாதிக்கு கூட்டு அனுபவம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆவணம் உள்ளது. சர்வே எண்.3 முத்துமாரிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முத்துமாரி கவுண்டருக்கு கடன் தொகைக்காக எழுதி கொடுக்கப்பட்ட சொத்தாகும். சர்வே எண்.3 விஸ்தீரணம் 69 ஏர்ஸ் சொத்தானது பாகப்பிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை. சர்வே எண்.3 சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் முத்துமாரி மற்றும் 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

அவர்கள் பெயரில் எவ்வித ஆவணங்களும் கிடையாது. அதில் மேற்படி இருவருக்கும் 1/2 வரிசை பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. முத்துமாரி இறப்பிற்கு பின்னர் அவரது 1/2 வரிசை பாத்தியத்தில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 1/2 பாகம் ஏற்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.3ல் 1ம் பிரதிவாதிக்கு 3/4 பாகமும் எனக்கு 1/4 பாகமும் மட்டும் உள்ளது என்றும் முழு உரிமை கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1970 ம் வருட பத்திரத்தின் அடிப்படையில் எனக்கு எவ்வளவு சொத்துக்கள் விஸ்தீரனத்தில் மொத்தமாக ஒதுக்கப்பட்டு உள்ளது என்று என்னால் சொல்ல இயலாது.

நான் இவ்வழக்கில் தாவா சொத்துக்களை பொறுத்து 1970 ம் வருட பாகப்பிரிவு பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். அந்த ஆவணத்தில் இல்லாத சொத்துக்களை பொறுத்து நான் உரிமை கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. முத்துமாரி கவுண்டருக்கு பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் கிடையாது. கடனுக்காக விற்ற சொத்து என வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை. உண்மையாக இருந்திருந்தால் குறிப்பிட்டு இருப்பேன். என்றும் உண்மை இல்லாத காரணத்தால் தான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

1ம் பிரதிவாதி சர்வே எண்.3 ல் எனக்கு 1/4 பாகம் இருப்பதாக குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.29 ஆவணமே அந்த அறிவிப்பு தான் என்றும்அதை மறைத்து நான் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.